## (உ) மத்திய வங்கித் தொழில்

மீளப் பார்வையிடும் ஆண்டில் மத்திய வங்கியின் இருப்புச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 4,412 இலட்சம் ரூபாய்களால் அல்லது 17.5 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்விருப்புச் சொத்துக்களிலேற்பட்ட அதிகரிப்பு, 4,660 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த உள்நாட்டு இருப்புச் சொத்துக்களேயும், அதனை 249 இலட்சம் ரூபாய்களால் எதிரீடுசெய்த சர்வதேச ஒதுக்கிலேற்பட்ட வீழ்ச்சியையும் கொண்டிருந்தது. பொறுப்புக்களின் பக்கத்தில், சர்வதேச நிறுவனங்கள் அந்நிய அரசாங்கங்கள், அந்நிய வங்கித் தாபனங்கள் ஆகியவற்றின் வைப்புக்களிலேற்பட்ட 1,495 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பு, வெளிநாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடன்பாடுகளிலேற்பட்ட 286 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியை ஈடுசெய்ததன் தேறிய விளைவாக வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ரூபா 1,209 இலட்சம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது. மத்திய வங்கியின் நாணய வெளியீடு 1,091 இலட்சம் ரூபாய்களால் உயர்வுற்றது, அரசாங்கத்தினது வைப்புக்கள் 424 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில் வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 45 இலட்சம் ரூபாய்களாற் குறைவுற்றன.

மத்திய வங்கியின் உள்நாட்டு இருப்புச் சொத்துக்களிலேற்பட்ட விரிவு அரசாங்கத்துக்கான கொடுகடனில் ஏற்பட்ட விரிவினுலாகும். மத்திய வங்கியின் உடைமைகளிலிருந்த அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகளிலேற்பட்ட 2,694 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன், அரசாங்கத்துக்கான முற்பணங்களில் 375 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பும் ஏற்பட்டது. வர்த்தக வங்கிகளுக்கான முற்பணங்கள் 128 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன.

### கொடுகடன் கொள்கை

பண வீக்க அமுக்கங்கள் தோன்றுவதைத் தடைசெய்யும் முகமாக மத்திய வங்கியானது மொத்தப் பணவிரிவைப் பொறுத்தவரையில், ஒரு பொதுவான கட்டுப்பாடுடைய கொடுகடன் கொள்கையைக் கடைப்பிடித்த போதும், பொருளாதாரத்தின் அத்தியாவசிய உற்பத்தித் துறைகளுக்குக் கொடுகடன்களை அனுமதிக்கும் நோக்கத்துடன் அது தனது கொள்கையை ஏற்றவாறு மாற்றியுள்ளது. பண வீக்க அமுக்கங்களைக் கட்டுப்படுத்திவைத்திருக்கவேண்டிய அவசியம் 1968ல் மேலும் அதிகமாகவிருந்தது. 1967 நவெம்பரிற் கொண்டுவரப்பட்ட நாணய மதிப்பிறக்கத்திற்கும் 1968 மேயிற் கொண்டுவரப்பட்ட செலாவணிச் சீர்திருத்தங்களுக்கும் பின்னர் உருவடைந்த நாணயநிலைமையின் தேவைக்கிணங்க நாணயக் கொள்கை திருத்தியமைக்கப்படவேண்டியிருந்தது. இதனுல் நடைமுறையிலிருந்த கட்டுமட்டான கொள்கையைத் தொடர்ந்தும் நடாத்தவேண்டியதுமன்றிச் சிலவேளைகளில் அவைகளை வலுப்படுத்தவேண்டிய நிலைமையும் மத்திய வங்கிக்கு ஏற்பட்டது.

இவ்வாண்டில் முதல் ஐந்து மாதங்களிலே தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பு, முந்திய இரு ஆண்டுகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பளவாகவேயிருந்தது. இவ்வதிகரிப்பில் ஒரு பகுதி காலபோகத்தன்மையுடையனவாயும் தற்காலிகமானவையாகவும் சில மாதங்களுக்குள் மாறியமையத்தக்கனவென எதிர்பார்க்கப்படுவனவாயும் இருப்பினும், அவற்றில்

நீண்ட கால விரிவுப் பண்பும் அடங்கியுள்ளமை புலனாயிற்று. எனவே, மே மாதம் 5ந் தேதி அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் கொண்டு வரப்பட்டபொழுது வங்கி வட்டிவீதம் 5 சதவீதத்திலிருந்து 5½ சதவீதத் துக்கு உயர்த்தப்பட்டது. இவ்வாண்டின் முடிவின்போது மீண்டுமொரு கொடு கடன் விரிவு எதிர்பார்க்கப்பட்டது. இதற்காக மத்திய வங்கி புதிய கட்டுப் பாட்டு முறைகளைக் கைப்பிடிப்பதற்கு எண்ணவில்லை; ஆனால் ஓர் உண்மைத் தரமான திகதியொன்றினை அடிப்படையாக வைத்து, வர்த்தக வங்கிக் கொடுகடன் மீதான உச்ச மட்டங்களை மீண்டும் வரையறுப்பதெனத் தீர் மானம் செய்தது.

இதன்படி மத்திய வங்கியானது, வர்த்தக வங்கிகளினது குறித்த முற் பணங்களின் அதிகரிப்பை ஓகத்து அல்லது செத்தெம்பர் மட்டத்தின் (இதில் எது கூடவோ, அம்மட்டத்தின்) 8 சதவீதத்துக்கு மட்டுப்படுத்தும் முகமான புதிய உச்ச மட்டங்களை நியமித்தது. இவ்வுச்ச மட்டமானது ஆரம்பத்தில், ஒற்ரோபர் தொடக்கம் திசெம்பர் இறுதிவரைக்கும் செல்லுபடியானதாகும். இது கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், இறக்குமதி உண்டியல்கள், உள்ளூர் உண்டியல்கள் ஆகியவற்றின்மீது ஏற்புடைத்தாக அமையுமாயினும், ஏற்று மதி உண்டியல்கள் புதிய கமத்தொழிற் கடனுதவித் திட்டத்தின்கீழான கடன்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான முற்பணங்கள், தேயிலைத் தொழிற்சாலை புதுப்பித்தற் திட்டத்தின்கீழான கடன்கள் ஆகியவற்றிற்கு விலக்களிப்பதாகும். ஏற்றுமதிகளுக்கான கப்பலேற்று முன்னரான கொடு கடன்களை அடிப்படைத் திகதியின் மொத்த அளவிலும்பார்க்க 7 சதவீதத் தால் மேலும் அதிகரிப்பதற்கு வங்கிகளுக்கு அநுமதி வழங்கப்பட்டது. திசெம்பர் இறுதிவரை சகல வங்கிகளும், கொடுகடன் விரிவைக் குறிப்பிட்ட எல்லைக்குள் அடக்கி இயங்கியுள்ளன.*

### நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதி

1965ல் மத்திய வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதி, மீளப்பார்வையிடும் ஆண்டில் 200 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுகடனினால் மேலும் அதிகரிக்கப்பட்டது. இவ்வாண்டில் இந் நிதியிலிருந்து வழங்கப்பட்ட மீள நிதியீட்டற் கடன்களின் மொத்தம் 52 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, முந்திய ஆண்டினை விடச் சிறிதளவு அதிக மாகவிருந்தது. வர்த்தக வங்கிகளினாற் பாவிக்கப்பட்ட மீள நிதியீட்டல் வசதிகள், முந்திய ஆண்டுகளைவிட மிகவும் அதிகமாகி 23 இலட்சம் ரூபாய் களாக விளங்கின; இவை முற்றிலும் தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்திக்கு வழங்கப்பட்ட கடன்களாகவேயிருந்தன. ஏனைய கொடுகடன் நிலையங்கள் முந்திய ஆண்டினைவிட, குறைந்தளவு மீள நிதியீட்டத்தையே பெற்றன. இவை, தனியார் துறைக் கைத்தொழில்களுக்காகி, 30 இலட்சம் ரூபாய் களாக விளங்கின.

---

*1969 சனவரியில் உச்சமட்ட இயக்கம் சிறு மாற்றங்களுடன் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப் பட்டது.

இத் திட்டத்தின்கீழ் இதுவரை வழங்கப்பட்டு வெளிநின்ற மீளநிதியீட்டற் கடன்களின் தொகை, 1968 திசெம்பர் இறுதியிலுள்ளபடி, 96 இலட்சம் ரூபாய்களாகும்.

### வங்கித்தொழில் அபிவிருத்தி

சேமிப்புக்களை ஒன்றுதிரட்டுவதற்காக நிறுவன அமைப்புக்களை மாற்றியமைப்பதன் அவசியம்பற்றியும், இதுதொடர்பாக, தேசிய சேமிப்பு வங்கியொன்றினை அமைப்பதற்கு வேண்டிய செயல்முறைகள் கவனத்துக்கு எடுக்கப்பட்டனவென்றும் 1967ம் ஆண்டின் அறிக்கையிற் கூறப்பட்டிருந்தது. இப் புதுச் செயல்முறைகள் 1968ம் ஆண்டுக் காலப்பகுதியில் முடிவுசெய்யப்பட்டு, அதுசம்பந்தமான நகல் மசோதாவொன்றினை அரசாங்கம் தற்பொழுது கவனத்துக்கெடுத்துள்ளது.

அரசாங்க ஆதிக்கமுள்ள நீண்டகால நிதித் தாபனங்களாகிய இலங்கைத் தேசிய ஈட்டு வங்கி, கைத்தொழில் கமத்தொழில் கடனுதவிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மாற்றியமைப்பதுபற்றிய புதுச் செயல்முறைகளில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது. இப் புதுமுறைகள் இவ்விரு தாபனங்களின் தொழிற்பாடுகளை அதிகரித்து, அபிவிருத்தியின் அதிகரித்த தேவைகளை அவை சமாளிப்பதற்கு வசதியாக மத்திய வங்கியிலிருந்து அவைகளுக்கு மீளநிதியீட்டல் வசதிகளை அளிக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தன. தேசிய ஈட்டு வங்கியைப் பொறுத்தவரையில், மத்திய வங்கியால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் 1968ம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது (1968ன் 33ம் இலக்க அதிகாரச்சட்டம்).

மக்கள் வங்கி ஆணைக் குழுவின் விதந்துரைகளுக்கிணங்க, மக்கள் வங்கி அதிகாரச் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்கும் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இத் திருத்தம், மக்கள் வங்கியின் தொழிற்பாடுகளைச் சில துறைகளில் அதிகரிக்கும் நோக்குடன், பொருளாதார அபிவிருத்தியில் அது கூடிய பங்கினை எடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யும் நோக்கத்தையும் கொண்டிருந்தது.

வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றை, ஆரம்பிப்பதுபற்றி, 1967ம் ஆண்டில், மத்திய வங்கியினால் கொண்டுவரப்பட்ட முன்மொழிகள் நிதியமைச்சுடன் கலந்தாலோசனைக்கு எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில், இத்திட்டம் ஆபத்தினை இயலுமானளவுக்கு அகன்ற அடிப்படையில் அமைக்கும் நோக்கத்திற்காக கட்டாயமானதாயமைக்க உத்தேசிக்கப்பட்டது ; ஆனால் நிதி அமைச்சுக்குச் செய்யப்பட்ட முறையீடுகளின் பயனாக, இத்திட்டத்திற் சேர்வது சம்பந்தமாக வங்கிகளுக்கு விருப்புரிமை வழங்கப்பட்டது. மக்கள் வங்கியின் கிளை அதிகரிப்புக்களையும், அதனுடைய கிராம வங்கித் தொழிற்றிட்டத்தையும் கிராம சேமிப்புக்களை ஒன்றுதிரட்டுவதற்கு உபயோகிக்கக் கூடியதாகவிருப்பதால், இத்திட்டத்தினை விரைவில் முடிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மத்திய வங்கியின் துணைத்தாபனமாக அபிவிருத்தி வங்கியொன்றினை ஆரம்பிக்கும் யோசனையொன்று 1968ல் மத்திய வங்கியின் கூரிய கவனத்திலிருந்தது. இவ்வங்கி, தற்போதுள்ள நீண்டகால நிதியுதவி நிறுவனங்கள் ஆற்றும் தொழிற்பாடுகளோடு கூடிய உதவிகளையும், நிறுவன ஆக்கச் சேவைகளையும், ஓர் உற்பத்தித் திட்டத்தின் அளவு காரணமாக அல்லது அது உருப்பட்டு உற்பத்தி தொடங்கும் காலம்வரை அதில் அடங்கியுள்ள ஆபத்தின் காரணமாக வேறு நிலையங்கள் வேண்டிய பணவுதவியை வழங்கவியலாதவிடத்து, பணவுதவிகளையும் வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப் புதுமுறைச்செயல், தற்பொழுது, கொள்கையளவில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.